ந.க.எண்.1344/2017/வ1 நாள்: 15 .06.2017.

மாவட்ட வன அலுவலகம்,
திண்டுக்கல் வனக்கோட்டம்,
திண்டுக்கல்.

பொருள் :- மனு - பட்டா நிலத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க போர்வெல் வாகனங்கள் வனப்பாதையில் செல்ல அனுமதி கோரியது - தொடர்பாக..

பார்வை:- 1) திரு.அ.ரவி த/பெ அழகர்சாமி, அம்பாத்துரை, திண்டுக்கல் என்பவர் கடித நாள்:07.04.2017.
2) வனச்சரக அலுவலர், சிறுமலை கடித எண் இல்லை நாள்:இல்லை.

*********

பார்வை 1-ல் கண்ட கடிதத்தில் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தொப்பம்பட்டி கிராமம், புல எண்:103-ல் விவசாயம் செய்ய நீர் வசதிக்காக ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டி வனப்பாதையில் போர்வெல் வாகனங்கள் சென்று வர அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி மனு தொடர்பாக களத்தணிக்கை செய்து அறிக்கை செய்ய சிறுமலை வனச்சரக அலுவலர் கேட்டுக்கொண்டதனை தொடர்ந்து பார்வை 2-ல் கண்ட கடிதத்தில் அறிக்கை சமர்ப்பித்தார்.

அதன்படி மேற்படி தொப்பம்பட்டி கிராமம், புல எண்:103-னது திண்டுக்கல் வனக்கோட்டம், சிறுமலை வனச்சரகம், சிறுமலை வடமேற்கு சரிவு காப்புக்காட்டில் பாதை உரிமம் வழங்கப்பட்ட தொப்பம்பட்டி முதல் தொழுக்காடு வழியாக சிறுமலை புதூருக்கு செல்லும் 4 கெஜம் (3.60 மீ) அகலமுள்ள பாதையிலிருந்து இணைப்பதை 2 கெஜம் (1.80 மீ) அகலமுள்ள பாதை உள்ளது என்றும் மேற்படி பாதையில் போர்வெல் வாகனங்கள் செல்வதால் வனத்திற்கோ, வன உயிரினங்களுக்கொ எவ்வித பாதிப்பும் இல்லை என தெரிவித்ததன் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு போர்வெல் வாகனம் 16.06.2017 முதல் 30.06.207-க்குள் செல்ல அனுமதி வழங்கப்படுகிறது.

1) போர்வெல் வாகனங்கள் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் மட்டும் பயன்படுத்த வேண்டும்.
2) போர்வெல் வாகனங்கள் எக்காரணம் கொண்டும் வனத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது.
3) ஆழ்துளை கிணறு அமைக்கும் போது சம்மந்தப்பட்ட வனப்பணியாளர்கள் உடன் இருக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை மீறும்பட்சத்தில் அனுமதி எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/து.வெங்கடேஷ்,
மாவட்ட வன அலுவலர்,
திண்டுக்கல் கோட்டம், திண்டுக்கல்.

பெறுநர்:

திரு.அ.ரவி,
த/பெ சீ.அழகர்சாமி,
2/1, குவாரி ரோடு, சௌந்தரம் நகர்,
அம்பாத்துரை, திண்டுக்கல்.

நகல்: வனச்சரக அலுவலர், சிறுமலை.

மேற்படி தொப்பம்பட்டி கிராமம் புல எண்:103-ல் ஆழ்துளை கிணறு அமைக்க போர்வெல் வாகனங்கள் கொண்டு செல்லும் பொழுதும் மற்றும் ஆழ்துளை கிணறு அமைக்கும் பொழுது சம்மந்தப்பட்ட வனப்பணியாளர்களை உடன் இருந்து கண்காணிக்குமாறு வனச்சரக அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

16/6/17

வரைதொழில் அலுவலர்

16/6/17